# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24357580.*

**வழக்கு எண். 24465 / விசாரணை / 2009**

**விசாரணை நடைபெற்ற நாள் 27.01.2010.**

| | |
|---|---|
| முன்னிலை : | திரு. தி.சீனிவாசன். எம்.எஸ்சி.,<br>மாநில தகவல் ஆணையர் |
| மனுதாரர் : | திரு. எம். சிவசங்கரன்,<br>5/445, பாரதி நகர்,<br>கிளிஞ்சாடா அஞ்சல்,<br>காட்டேரி ( S.O.),<br>குன்னூர் ( HO),<br>நீலகிரி மாவட்டம் – 643 213. |
| பொது அதிகார அமைப்பு : | பொதுத் தகவல் அலுவலர் / தனி வட்டாட்சியர்,<br>நத்தம் நிலவரித் திட்டம்,<br>குன்னூர்,<br>நீலகிரி மாவட்டம். |

---------

மனுதாரர் திரு. எம். சிவசங்கரன் மற்றும் திருமதி. V.C. சுமா, தனி வட்டாட்சியர், நத்தம் நிலவரித் திட்டம், குன்னூர் இவ்வாணையத்தில் இன்று (27.01.2010) நடைபெற்ற விசாரணைக்கு வந்திருந்தனர்.

மனுதாரர் 12.06.08 அன்று 10 இனங்களில் தகவல் கேட்டு மனு செய்துள்ளார். மனுதாரருக்கு தகவல் கிடைக்காததால் 06.07.08 அன்று நினைவூட்டும், 14.07.08 அன்று மேல்முறையீடும் செய்துள்ளார். இவ்வாணையத்திற்கு 29.09.09 அன்று தகவல் கிடைக்கப்பெறவில்லை என்று மேல்முறையீடு செய்த மனு இன்று (27.01.2010) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையில் மனுதாரர் தகவல் எதுவும் பெறப்படவில்லை என்றும், மேல்முறையீட்டிற்கு 07.07.09 அன்று அனுப்பப்பட்ட கடிதத்தில் ஏற்கெனவே தகவல் அனுப்பப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது என்றும் தெரிவித்தார். மனுதாரருக்கு அளிக்கப்பட்டுள்ள கடிதத்தை பார்வையிட்டதில் 23.06.09 அன்று மனுதாரருக்கு தகவல் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து பொதுத் தகவல் அலுவலரிடம் விசாரித்ததில் குறிப்பிட்ட ஆவணங்களை ஆணையத்தின் பார்வைக்கு அளித்தார். ஆவணங்களை பார்வையிட்ட போது 23.06.09 அன்று மனுதாரருக்கு தகவல் அஞ்சல் அனுப்புகைச் சான்றிதழ் (Certificate of Posting) மூலம் அனுப்பபப்பட்டதற்கான ஆதாரங்கள் கோப்பிலிருந்து அறியப்பட்டது. விசாரணையின் போது மனுதாரருக்கு அதன் நகல் பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்டது. மனுதாரருக்கு தகவல் வழங்கப்பட்டிருந்தும், மனுதாரருக்கு தகவல் கிடைக்காததாலும், விசாரணையின் போது தகவல் அளிக்கப்பட்டதாலும் இவ்வழக்கு இத்துடன் முடிவு செய்யப்படுகிறது.

ஒப்புதல் பெறப்பட்ட நாள் 01.02.2010
ஆணையத்தின் ஆணைப்படி

தமிழ்நாடு தகவல் ஆணையம்

( சு. மோகன தாஸ் )
உதவிப் பதிவாளர்

<u>வழக்கு எண். 24465/09</u>

பெறுநர்

பொதுத் தகவல் அலுவலர் / தனி வட்டாட்சியர்,
நத்தம் நிலவரித் திட்டம்,
குன்னூர்,
நீலகிரி மாவட்டம்.

திரு. எம். சிவசங்கரன்,
5/445, பாரதி நகர்,
கிளிஞ்சாடா அஞ்சல்,
காட்டேரி ( S.O.),
குன்னூர் ( HO),
நீலகிரி மாவட்டம் – 643 213.